## மே – 16 – வியாழன்

**நான் அனுப்புகிறவரை ஏற்றுக் கொள்பவர் என்னையே ஏற்றுக்கொள்கிறார். யோவான்13:20**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 13 : 13 : 25

சகோதரர் சகோதரிகளே, பவுலும் அவரோடு இருந்தவர்களும் பாப்போவிலிருந்து கப்பலேறி, பம்பிலியாவிலுள்ள பெருகை நகருக்கு வந்தார்கள். அங்கே யோவான் அவர்களை விட்டு அகன்று எருசலேமுக்குத் திரும்பினார். அவர்கள் பெருகையிலிருந்து புறப்பட்டுச் சென்று பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவை அடைந்தார்கள். ஓய்வு நாளன்று அவர்கள் தொழுகைக்கூடத்திற்குச் சென்று அங்கு அமர்ந்திருந்தார்கள். திருச்சட்டமும் இறைவாக்கினர் நூல்களும் வாசித்து முடிந்தபின் தொழுகைக் கூடத் தலைவர்கள் அவர்களிடம் ஆளனுப்பி, "சகோதரரே, உங்களுள் யாராவது மக்களுக்கு அறிவுரை கூறுவதாயிருந்தால் கூறலாம்" என்று கேட்டுக்கொண்டார்கள். அப்போது பவுல் எழுந்து கையால் சைகை காட்டிவிட்டுக் கூறியது. "இஸ்ரயேல் மக்களே, கடவுளுக்கு அஞ்சுவோரே, கேளுங்கள். இந்த இஸ்ரயேல் மக்களின் கடவுள் நம்முடைய மூதாயரைத் தேர்ந்தெடுத்தார் அவர்கள் எகிப்து நாட்டில் அன்னியர்களாகத் தங்கியிருந்தபோது அவர்களை ஒரு பெரிய மக்களினமாக்கினார். பின்பு அவர்தம் தோள்வலிமையைக் காட்டி அவர்களை அந்த நாட்டைவிட்டு வெளியே அழைத்துக் கொண்டு வந்தார். நாற்பது ஆண்டு காலமாய்ப் பாலை நிலத்தில் அவர்களிடம் மிகுந்த பொறுமை காட்டினார். அவர் கானான் நாட்டின்மீது ஏழு மக்களினங்களை அழித்து அவர்கள் நாட்டை இவர்களுக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகள் உரிமைச் சொத்தாக அளித்தார். அதன் பின்பு இறைவாக்கினர் சாமுவேலின் காலம்வரை அவர்களுக்கு நீதித் தலைவர்களை அளித்தார். பின்பு அவர்கள் தங்களுக்கு ஓர் அரசர் வேண்டும் என்று கேட்டார்கள். கடவுள் கீசு என்பவரின் மகனான சவுல் என்பவரை அவர்களுக்கு அரசராகக் கொடுத்தார். பென்யமின் குலத்தினராகிய அவர் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார். பின்பு கடவுள் அவரை நீக்கிவிட்டுத் தாவீதை அவர்களுக்கு அரசராக ஏற்படுத்தினார் அவரைக் குறித்து "ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன் என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்" என்று சான்று பகர்ந்தார். தாம் அளித்த வாக்குறுதியின்படி கடவுள் அவருடைய வழிமரபிலிருந்தே இஸ்ரேலுக்கு இயேசு என்னும் மீட்பர் தோன்றச் செய்தார். அவருடைய வருகைக்கு முன்பே யோவான், "மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள்" என்று இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் பறைசாற்றி வந்தார். யோவான் தம் வாழ்க்கை என்னும் ஓட்டத்தை முடிக்கும் தறுவாயில் "நான் யார் என நீங்கள் நினைக்கிறீர்களோ அவரல்ல நான். இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவருடைய மிதியடிகளை அவிழ்க்கவும் எனக்குத் தகுதியில்லை" என்று கூறினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பை என்றென்றும் நான் அறிவிப்பேன்.

### நற்செய்தி : யோவான் 13 : 16 – 20

அக்காலத்தில், சீடர்களின் பாதங்களைக் கழுவிய பின் இயேசு அவர்களுக்கு, பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல. தூது அனுப்பப்பட்டவரும் அவரை அனுப்பியவரைவிடப் பெரியவர் அல்ல என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள். உங்கள் அனைவரையும்பற்றி நான் பேசவில்லை. நான் தேர்ந்து கொண்டவர்கள் யாரென எனக்குத் தெரியும். எனினும், "என்னோடு உண்பவனே என்மேல் பாய்ந்தான்" என்னும் மறைநூல் வாக்கு நிறைவேறியாக வேண்டும். அது நிறைவேறும்போது, "இருக்கிறவர் நானே" என்று நீங்கள் நம்புமாறு இப்போதே, அது நிறைவேறுமுன்பே, அதுபற்றி உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன். நான் அனுப்புகிறவரை ஏற்றுக்கொள்பவர் என்னையே ஏற்றுக் கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னை அனுப்பியவரையே ஏற்றுக்கொள்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசுவால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்களாகிய (கிறஸ்தவர்களாகிய) நாங்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக, அவரது வார்த்தையை சுமந்து செல்பவர்களாக உள்ளோமா? என்று ஒருகணம் சிந்திக்க இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை அழைக்கின்றன. பவுலும் பர்னபாவும் தனது ஊழியத்துக்கென மேற்கொண்ட முதற் பயணத்தில் பல நகரங்களுக்குச் சென‌றார்கள். அங்கு யூதரின் செபக்கூடங்களில் கற்பித்தார்கள். பழைய ஏற்பாட்டின் கடவுளின் திட்டம், புதிய ஏற்பாட்டின் உடன்படிக்கையில் நிறை வேற்றப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி தாமே அதற்கு சாட்சிகளாக விளங்கினார்கள். அவர்களை ஏற்றுக்கொண்ட மக்கள் கிறஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள், அவர் வழியாக தந்தையை கண்டார்கள். இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகமும் தெளிவுபடுத்தகின்றது. அதாவது நான் அனுப்புகிறவரை ஏற்றுக்கொள்பவர் என்னையே ஏற்றுக்கொள்கிறார். (யோவான்13:20) உண்மையான கிறிஸ்துவின் ஊழியர்களாகிய நாம் எமது சொல்லிலும், செயலிலும் கிறிஸ்துவை பிரதிபலிக்க இறையருளை வேண்டுவோம். இறை அனுபவம் கொண்டு மக்களை இறைவனிடம் அழைத்துச் செல்வதே சீடத்துவப்பணி எனபதை உணர்ந்து கொள்வோம். இயேசு தனது வார்த்தைகள், பணி, சிலுவை மரணம் மூலமாக நம்மை தந்தையிடம் அழைத்துச் செல்கிறார். நம்முடைய வாழ்வில், பணியில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறோமா?